# திருமந்திரத்தில் காணலாகும் இல்லறவியல் சிந்தனைகள்

22

முனைவர் க.சுப்புலட்சுமி, உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி-2.

**ஆய்வுச்சுருக்கம்**

திருமூலரின் திருமந்திரத்தில் ஒன்பது உட்பிரிவுகள் உள்ளன. இந்தப்பிரிவுகள் தந்திரம் என அழைக்கப்படுகிறது.முதலாம் தந்திரத்தில் இல்லறவியல் குறித்த சிந்தனைகள் காணப்படுகின்றன. ஆவற்றை ஆய்வதே இவ்வாய்வு ஆகும்.

**முன்னுரை**

இல்வாழ்க்கை வாழ்க்கைத் துணைநலம், அன்புடைமை ,விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை ,ஈகை போன்ற இல்லறவியல்கருத்துக்கள் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளன.

**இல்வாழ்க்கை** :

தென்புலத்தார் தெய்வம விருந்து சுற்றம் தான் என்ற ஐம்புலத்தாறு ஓம்புதலை இல்லறத்தானின் தலையாய கடமை என்று திருக்குறள் குறிப்பிடும். இக்குறட்பா விளக்கத்தில் அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்றாயிற்று. இவ்வைம்புலத்திற்கு ஐந்து கூறு வேண்டுதலான என்பதறிக என விளக்குவர் பரிமேலழகர். இக்குறட் கருத்தும் உரை விளக்கமும் அடங்க அமைந்த திருமந்திரப் பாடல்

**திறந்தரு முத்தியும் செல்வமும் வேண்டின்**
**மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்**
**சிறந்தநீர் ஞாலம் செய்தொழில் யாவையும்**
**அறைந்திடில் வேந்தனுக்கு ஆறில் ஒன்றாமே**

**(திருமந்திரம் 244)**

என்பதாகும்.

**வாழ்க்கைத் துணைநலம் :**

கற்புடை மங்கை கணவனைத் தொழுதெழுவாள் என்பது குறள். எழுந்த பிறகு தானே தொழ முடியும் என்று எண்ணலாம். ஆழ்ந்த ஈடுபாட்டுடன் தூங்கும் வரை ஒரு செயலைச் செய்தவர் விழித்தவுடனும் அதே செயலைத் தொடர்ந்து செய்வர். இத்தொடரில் உள்ள ஈடுபாட்டால்,

**பழுதுபடா வண்ணம் பண்பனை நாடித்**
**தொழுதொழ வையகத் தோரின்ப மாமே**

**(திருமந்திரம் - 1864)**

என்று பக்தர் செயலாகக் குறிப்பிடும் திருமந்திரம்.

**அன்புடைமை**

**அன்பின் வழிய துயர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு –**

**(திருக்குறள் - 80)**

என்பது திருக்குறள்
என்புதோல் போர்த்த உடம்பு என்ற குறளடி

**என்பிற் கொளுவி இசைந்துறு தோற்றசை**
**முன்பிற் கொளுவி முடிகுவதாமே**

**(திருமந்திரம் - 432)**

ஏனத் திருமந்திரத்தில் அமைந்துள்ளது.

**விருந்தோம்பல்**

**செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு**

**(திருக்குறள் - 86)**

என்ற குறட்பாவில் உள்ள வருவிருந்து பார்த்திருப்பான் என்ற குறட் கருத்து பார்த்திருந்து உண்மின் என்ற திருமந்திரப் பாடலில் உள்ளது.

நல்விருந்து வானத்தவர்க்கு என்ற கருத்தின் சாயலை.

**சேருறு காலம் திசைநின்ற தேவர்கள்**
**ஆரிவன் என்ன அரனாம் இவனென்ன**
**ஏருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்**
**காருறு கண்டனை மெய்கண்ட வாறே**

**(திருமந்திரம் - 636)**

என்ற திருமந்திரப் பாடலில் காணமுடிகிறது.

விருந்துண்போர் விழுமியோர் ஆயின் பயன் பெரிது. இழிந்தவராயின் பயன் சிறிது. இக்கருத்தை இனைத்துணைத்து என்ற குறட் பாடல் உணர்த்தும். நல்லவர், தீயவர்கட்குக் கொடுக்கும் பயன் குறித்து பாத்திரம், அபாத்திரம் என்ற தலைப்பில் திருமந்திரம் விளக்கும்.

எள்ளளவேனும் சிவஞானிக்கு அளித்தால் முத்தி, சித்தி, போகம் கிடைக்கும். நில மொத்த பொன்னை மூடர்க்கு அளித்தால் பயனில்லை. மறுமையின்பமும் கிடைக்காது என்பதனை

**திலமத்தனையே சிவஞானிக் கீந்தால்**
**பலமுந்தி சித்தி பரபோக முந்தரும்**
**நிலமத் தனை பொன்னை நின்மூடர்க் கீந்தால்**
**பலமுமற் றேபர போகமுங் குன்றுமே**
**ஒழுக்கமும் நோன்பும் இல்லாதர்க்கு வழங்குதல்**
**பருவந்தப்பிச் செய்த பயிர்போலப் பயனற்றது.**

**(திருமந்திரம் - 501)**

என்பதனை

**கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவதே யொக்கும்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே**

**(திருமந்திரம் - 505)**

யோகம் இயமம் நியமம் முதலியவற்றை அறிந்தவர்க்கன்றி அறியாதவர்க்கு ஈதல் பெரும் பிழை என்றும் திருமந்திரம் கூறும். இந்நூலில் குரு பூஜை என்னும் தலைப்பின் கீழ்க் காணப்பெறும். பாடல்கள் அடியார்க்கு உணவளித்தலே உயர்ந்தது எனக் கூறுகின்றன. சிவனடியார்க்கு அளிக்கும் உணவு இறைவனுக்கே கொடுத்ததாகும். துறவிகள் உண்ட உணவு மூவுலகும் உண்டது போன்றது. அவர்க்கு கொடுத்த அரும்பொருள் மும்மூர்த்திக்கும்இ மூவேழ் குரவர்க்கும் அளித்தது போன்றது. பல ஊர்களை அந்தணர்க்கு கொடுப்பதை விட பல கோயில்களைக் கட்டி முடிப்பதை விட ஞானிக்குப் பகலுணவு அளிக்கும் பயன் நிகரற்றது. மறை ஓதும் அந்தணர் கோடிப் பேர் உண்பதை விடத் தொண்டர்க்கு உணவிடுவதாக நினைத்தலே பெரும்பயன் தரவல்லது. அருந்தவத்தினர்க்கு அறஞ்செய்தால் அவ்வறம் வினை நீக்கி பொன்னுலகு அளிக்கும்..

இனியவை கூறல்

இன்சொலினதே அறம் என்று குறள் கூறுவது போல **“யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே”**

**திருமந்திரம் – 252**

என்று திருமந்திரம் அறிவுறுத்துகிறது.

**செய்ந்நன்றி அறிதல்**

தினைத்துணை நன்றி செயினும் என்ற குறளாட்சியை பின்பற்றி தினைப் பிளந்தன்ன சிறுமையர் எனக்கூறும் திருமந்திரம் எழுமை ஏழுபிறப்பும் என்ற குறளாட்சியை ஏழேழ் பிறவி என்று குறிப்பிடுகிறது திருமந்திரம்.

**நடுவு நிலைமை**

நடுவு ஓரீஇ என்ற சொற்கள் நடுநிலைமை அதிகாரத்தில் நடுவு நிலைமையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

“நடுவல்ல செய்தின்ப நாடவும் ஒட்டான்” திருமந்திரம் -

என்று திருமந்திரத்தில் இதே பொருளில் பயின்று வருகிறது. நடுவு என்று சொல் திருமந்திரத்தில் யோக நெறியினைக் குறிக்கவும் வந்துள்ளது.

**அடக்கமுடைமை :**

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து –**

**(திருக்குறள் - 126)**

என்பது குறள்

ஐந்து உறுப்புக்களையும் ஓட்டுக்குள் அடக்கும் ஆமை போல் ஐம்பொறிகளை அடக்கினால் அச்செயல் ஏழு பிறப்பின் கண்ணும் பாதுகாவலை உடைத்து என்பது பொருள். மன ஒருமைப்பாடு உடையவரே இறைவன் இயல்பைத் தெளிவாக உணர்வார் என்ற கருத்தை

**ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி**
**இருமையுங் கேட்டிருந்தார்புரை அற்றே**
**(திருமந்திரம் - 133)**

ஏன்ற பாடலில் விளக்கும் திருமந்திரம். ஓம் என்னும் மந்திரம் ஐந்துறுப்பையும் தீமைக்கண் செல்லாது அடக்கும் என்ற கருத்தை

**ஊமை யெழுத்தோடு பேசும் எழுத்துறில்**
**ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்**
**(திருமந்திரம் - 2158)**

**பிறனில் விழையாமை :**

பிறன் மனையாளை விரும்புவது பேதைமை பிறன்மனை நோக்காமை பேராண்மை எனக் குறள் கூறும் கருத்துக்களைஇ

**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறும் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே**
**(திருமந்திரம் - 201)**

ஏன விளக்கும் திருமந்திரம்

**பொறையுடைமை** :

உண்ணாது நோற்பர் பெரியர் - பிறர் சொல்லும் இன்னாச் சொல்லைப் பொறுப்பவர் அவரைவிடப் பெரியவர் என்பது குறள். வாடித் தவஞ் செய்வதே தவம் எனத் தழுவிக் கூறுகிறது திருமந்திரம்.

**அழுக்காறாமை**

அழுக்காறிலாத இயல்பு ஒழுக்க நெறி என்றும் யாரிடத்தும் அழுக்காறிலாத தன்மை வாய்ககப் பெற்றால் அது சிறந்த நற்பேறு என்றும் குறள் கூறும். இக்கருத்தைஇ

**அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்**
**வெவ்விய னாகிப் பிறர் பொருள் வவ்வன்மின்**
**(திருமந்திரம் - 196)**

என்று பேசும் திருமந்திரம்.

**வெஃகாமை**

பயன்விரும்பிப் பழிவரும் காரியங்களைச் செய்யமாட்டார்கள். நடுவுநிலை அன்மையை அஞ்சுபவர்கள் என்ற குறட் கருத்துஇ

**கெடுவதும் ஆவதும் கேடில் புகழோன்**
**நடுவல்ல செய்தின்பம் நாடவும் ஒட்டான்**

**(திருமந்திரம் - 268)**

என்று திருமந்திரத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**ஈகை**

வறியார்க் கொன்றீவதே ஈகை என்று குறள் குறிப்பிடுகிறது. இருவகைப் பற்றும் அற்ற துறவியர்க்கு அளிக்கும் உணவே அறம் என்கிறது திருமந்திரம். மற்றொரு பாடலில் ஆர்க்கும் இடுமீன் அவரிவர் எண்ணன்மின் என்றும் பேசுகிறது.

ஈத்துவக்கும் இன்பம் அறியாதாரை வன்கணவர் என்று குறள் சுட்டும். இன்பம் அது கண்டும் ஈகிலாப் பேதைகள் என விளக்கும் திருமந்திரம் இவ்வாறு திருக்குறள் இல்லறவியல் கருத்துக்கள் திருமந்திரத்தில் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

வள்ளுவர் கண்ட இல்லறம்
சி .இலக்குவனார்
மணிவாசகர் பதிப்பகம்
இலக்கிய வாழ்வியல் நெறி
எஸ். குருசாமி
தாமரை பப்ளிகேஷன்ஸ்
திருமூலரின் வாழ்வியல் விழுமியங்கள்
முனைவர் க. அன்பழகன்
ஜெயா பப்ளிகேஷன்ஸ்